
"ஏழ்மையும், அறியாமையும் கனவுகளை
அழித்துவிட அனுமதியோம்..."

# 6 முதல் 10ம் வகுப்பு வரை

## புதிய பாடத்திட்டத்தின் படி

## (வரலாறு, குடிமையியல், புவியியல், பொருளியல்)



## TNPSC - GROUP I, II, II A,IV,
## VAO, VII, VIII
## TNUSRB/TET/TRB

# வினா விடை வங்கி

வகுப்புவாரியாக

# Question Bank

# திண்ணை

## பயிற்சிப் பட்டறை, தேனி

9940970325 Thinnai Theni Thinnai Competitive Exam thinnaimail@gmail.com

www.thinnai.org Thinnai Study Circle 9361482208

# திண்ணை உறுதிமொழி

இரக்கமும் கருணையும் இருகண்களாகட்டும்!
இதழ்கள் இரண்டிலும் புன்னகை மலரட்டும்!
உழைப்பும், உறுதியும் இருதோள்களாகட்டும்!
நேர்மை ஒன்றையே நெஞ்சம் தாங்கட்டும்!
இடதும் வலதும் இணைந்த கரங்களாகட்டும்!
இதயம் என்றும் அன்பால் துடிக்கட்டும்!
தடைகளைத் தாண்டி கால்கள் ஓடட்டும்!
கொட்டும் வியர்வையே மூலதனமாகட்டும்!
சாதி மதம் பேதம் ஒழிப்போம்!
பதவி பணம் தரும் கர்வம் தவிர்ப்போம்!
லட்சியம் விதைத்து வெற்றியை அடைந்து!
லஞ்சம் தவிர்த்து நெஞ்சை நிமிர்த்து!
அறத்தின் வழி நின்று மனிதம் போற்று!

# பொருளடக்கம்


| வ.எண் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 1. | 6 ஆம் வகுப்பு சமூகஅறிவியல் | 3 - 21 |
| 2. | 7 ஆம் வகுப்பு சமூகஅறிவியல் | 22 - 39 |
| 3. | 8 ஆம் வகுப்பு வரலாறு மற்றும் குடிமையியல் | 40 - 55 |
| 4. | 8 ஆம் வகுப்பு புவியியல் மற்றும் பொருளியல் | 56 - 72 |
| 5. | 9 ஆம் வகுப்பு வரலாறு மற்றும் புவியியல் | 73 - 88 |
| 6. | 9 ஆம் வகுப்பு குடிமையியல் மற்றும் பொருளியல் | 89 - 106 |
| 7. | 10 ஆம் வகுப்பு வரலாறு | 107 - 119 |
| 8. | 10 ஆம் வகுப்பு புவியியல் | 120 - 137 |
| 9. | 10 ஆம் வகுப்பு குடிமையியல் | 138 - 152 |
| 10. | 10 ஆம் வகுப்பு பொருளியல் | 153 - 163 |

1. சரியான விடையைத் தேர்ந்தெடு:

கருத்து(A) : இந்தியாவின் நாடாளுமன்றக் கட்டிடத்தை வடிவமைத்தவர் - எட்வின் லுட்டியன்ஸ் , ஹெர்பர்ட் பேக்கர்

காரணம்(R) : இக்கட்டிடத்தை 1921 ஆம் ஆண்டு கட்டத்தொடங்கி, 1927 - ல் முடித்தனர்.

A. A மற்றும் R இரண்டும் சரி, A ன் சரியான விளக்கம் R ஆகும்

B. A மற்றும் R இரண்டும் சரி, A ன் சரியான விளக்கம் R அல்ல

C. A சரி ஆனால் R தவறு D. A தவறு ஆனால் R சரி E. விடை தெரியவில்லை

2. பிரிட்டிஷ் இந்தியாவில் முதல் பொதுத்தேர்தல்

A. 1920 B. 1921 C. 1922 D. 1923 E. விடை தெரியவில்லை

3. பொருத்துக:

1. பெண்கள் உதவி மையம் எண் - 1098

2. குழந்தைகள் உதவி மையம் எண் - 1091

3. TN பெண்கள் உதவி மையம் எண் - 181

A. 1 2 3 B. 2 1 3 C. 1 3 2 D. 3 2 1 E. விடை தெரியவில்லை

4. தேசிய வாக்காளர் தினம்

A. ஜனவரி 25 B. ஜனவரி 30 C. ஜனவரி 12 D. ஜனவரி 21 E. விடை தெரியவில்லை

5. 2017 நிலவரப்படி அங்கீகரிக்கப்பட்டுள்ள தேசிய கட்சிகளின் எண்ணிக்கை

A. 5 B. 8 C. 7 D. 6 E. விடை தெரியவில்லை

6. சரியான கூற்றைத் தேர்ந்தெடு.

1. அரசு என்னும் பதம் பழைய பிரெஞ்சு வார்த்தையான கவர்னர் என்பதிலிருந்தும் இயக்கு, ஆட்சி செய், வழி நடத்து, ஆள் என்று பொருள் தரும் லத்தீன் வார்த்தையான குபர்னர் என்பதிலிருந்தும் பெற்றப்பட்டது.

2. இரட்டை ஆட்சி முறை என்பது இறையாண்மை மிக்க ஓர் அரசு ஒரே நிறுவனமாக இருந்து அட்சி செய்தவதாகும்.

A. 1, 2 சரி B. 1, 2 தவறு C. 1 சரி, 2 தவறு D. 1 தவறு, 2 சரி

E. விடை தெரியவில்லை

7. காடுகள், எரிகள், ஆறுகள், விலங்கினங்கள் ஆகியவை உள்ளிட்ட புறச்சூழலைப் பாதுகாத்து மேம்படுத்துவதுடன் உயிரினங்கள் மீதும் கருணை காட்ட வேண்டும் என்று கூறக்கூடிய சரத்து எது?

A. சரத்து 51-C B. சரத்து 51-G C. சரத்து 51-E D. சரத்து 51-F

E. விடை தெரியவில்லை

8. ஒரு செயலை செய்யவோ அல்லது அச்செயலை தடுக்கவோ, நீதிமன்றத்தால் அல்லது வேறு சட்ட அமைப்பினால் வழங்கப்படும் எழுத்துப்பூர்வமான உத்தரவு

A. நீதிப்பேராணை B. நீதிச்சீராய்வு C. நீதி மறுஆய்வு D. A (ம) C E. விடை தெரியவில்லை

9. தவறான கூற்றைத் தேர்ந்தெடு.

1. உலோகங்களே முதன் முதலில் பயன்படுத்தப்பட்ட பணம் எனலாம்.

2. உலோகம் அப்போது அரிய பொருளாகவும் நீண்ட காலம் பராமரிக்கக்கூடியதாகவும் மதிப்பு மாறாததாகவும் இருந்தது.

3. தங்கம், வெள்ளி, செம்பு போன்ற உலோகங்கள் இவ்வாறு பண்டமாற்று முறைக்குப் பதிலாகப் பயன்படுத்தப்பட்டன.

A. 1 மட்டும் B. 2 மட்டும் C. 3 மட்டும் D. இவற்றில் எதுவுமில்லை

E. விடை தெரியவில்லை

10. "ஒரு உண்மையான மக்களாட்சியை, 20 பேர் குழுவாக அமர்ந்து கொண்டு செயல்படுத்த முடியாது" என்று கூறியவர் யார்?

A. அண்ணா B. நேரு C. ராஜாஜி D. காந்தி E. விடை தெரியவில்லை

11. அழுத்தக்குழு என்ற சொல் எந்த நாட்டில் உருவாக்கப்பட்டது?

A. அமெரிக்கா B. ஐரோப்பா C. ஆஸ்திரேலியா D. இங்கிலாந்து E. விடை தெரியவில்லை

12. வாங்கும் திறன் சமநிலை

1. முதலிடம் - சீனா

2. இரண்டாவது இடம் - இந்தியா

3. மூன்றாவது இடம் - அமெரிக்க ஐக்கிய நாடுகள்

A. 1,2,3 சரி B. 1,2 சரி 3 தவறு C. 1,3 சரி 2 தவறு D. 1 சரி 2,3 தவறு

E. விடை தெரியவில்லை

13. பொருத்துக:

அ) தேசியப் பசுமை தீர்ப்பாய சட்டம் - 2002

ஆ) பல்லுயிர்மை பாதுகாப்புச் சட்டம் - 2010

இ) சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம் - 1980

ஈ) வன (பாதுகாப்பு) சட்டம - 1986

உ) நீர் பாதுகாப்பு (ம) மாசுபடுத்துதல்

தடுப்பு சட்டம் - 1972

ஊ) வனவிலங்குகள் பாதுகாப்பு சட்டம் - 1974

A. 1 2 3 4 5 6 B. 2 1 4 5 6 3 C. 2 1 4 3 6 5 D. 2 1 4 6 5 3

E. விடை தெரியவில்லை

14. a. முதன்மை துறை - விவசாயம், காடுகள், மீன் வளர்ப்பு போன்றவை

b. 2 ஆம் துறை - உற்பத்தி, சிறிய மற்றும் பெரிய தொழிற்சாலைகள் போன்றவை

c. சேவை துறை - போக்குவரத்து, வங்கி, வணிகம், அரசு மற்றும் அரசு சாரா சேவைகள்

d. 4 ஆம் துறை - அறிவியல் அறிஞர்கள் (ம) அரசாங்கத்தின் கொள்கைகளில் முடிவு எடுப்பவர்கள்.

e. 5 ஆம் துறை - பயன்பாட்டில் உள்ள பழைய கருத்துகள் மற்றும் புதிய கருத்துகளை விவரணம் செய்தல்

A. a, b, c, d, e சரி B. a, b, c சரி d, e தவறு C. a, c, e சரி b, d தவறு

D. a, b, d சரி c, e தவறு E. விடை தெரியவில்லை

15. கருத்து A: மூத்த குடிமக்கள் மற்றும் பெற்றோர் நலன்கள் பராமரிப்புச் சட்டம் 2005ல் சட்டமாக இயற்றப்பட்டது.

காரணம் R: இந்தச் சட்டம் பிள்ளைகளுக்கும் வாரிசுகளுக்கும் தங்கள் பெற்றோரை அல்லது மூத்த குடிமக்களைப் பாதுகாக்குமாறு கேட்டுக்கொள்ளும் சட்டப்பூர்வ வேண்டுகோள் ஆகும்.

A. A மற்றும் R இரண்டும் சரி, A ன் சரியான விளக்கம் R ஆகும்

B. A மற்றும் R இரண்டும் சரி, A ன் சரியான விளக்கம் R அல்ல

C. A சரி ஆனால் R தவறு D. A தவறு ஆனால் R சரி E. விடை தெரியவில்லை

16. ஐக்கிய நாடுகள் சபை 18 வயது வரையுள்ள அனைவரையும் குழந்தைகள் என வரையறுக்கிறது. இது உலகளாவிய மனித உரிமைகள் பிரகடனத்தின் பிரிவு ...................... காணப்படுகின்றது.

A. பிரிவு 24 B. பிரிவு 25 C. பிரிவு 26 D. பிரிவு 23 E. விடை தெரியவில்லை

17. பின்வருவனவற்றில் எது பொதுத்துறை நிறுவனம் அல்ல

A. நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம் B. இந்திய உருக்கு ஆணையம்

C. பாரத தொலைபேசி நிறுவனம் D. டிவிஎஸ் மோட்டார் நிறுவனம் E. விடை தெரியவில்லை

18. பொருத்துக.

| நாடு | செலவாணியின் பெயர் |
|---|---|
| அ) இங்கிலாந்து | - 1. யுவான் |
| ஆ) கனடா | - 2. ரூபாய் |
| இ) சீனா | - 3. டாலர் |
| ஈ) பாகிஸ்தான் | - 4. பவுண்டு |

A. 1 2 3 4 B. 4 3 1 2 C. 4 3 2 1 D. 4 1 2 3 E. விடை தெரியவில்லை

19. பொருத்துக.

அ) மத்தியப் பட்டியல் - 1. நீதித்துறை நிர்வாகம்

ஆ) மாநிலப் பட்டியல் - 2. மக்கள்தொகை கட்டுப்பாடு

இ) பொதுப் பட்டியல் - 3. தொலைத்தொடர்பு

A. 3 2 1 B. 1 2 3 C. 3 1 2 D. 2 1 3 E. விடை தெரியவில்லை

20. தவறான இணையைத் தேர்ந்தெடு.

A. பல்வந்த்ராய் மேத்தா குழு - 1957

B. அசோக் மேத்தா குழு - 1977

C. ஜி.வி.கே. ராவ் குழு - 1985

D. எல்.எம். சிங்வி குழு - 1978

E. விடை தெரியவில்லை

21. இந்திய அரசமைப்பில் குழந்தைகள் உரிமை

1) Art 45 - பதினான்கு வயதுக்குட்பட்ட எந்த குழந்தையும் ஆபத்தான வேலைகளில் ஈடுபடுத்தக்கூடாது

2) Art 24 - பதினான்கு வயது நிறைவடையும் வரை இலவச மற்றும் கட்டாய கல்வி அனைத்து குழந்தைகளுக்கும் அளிக்கப்பட வேண்டும்

3) Art 21A - 6 முதல் 14 வயதுள்ள அனைத்துக் குழந்தைகளுக்கும் இலவச கட்டாய கல்வி வழங்குதல்

A. 1,2,3 சரி B. 1,2 தவறு 3 சரி C. 1,3 சரி 2 தவறு D. 1 சரி 2,3 தவறு

E. விடை தெரியவில்லை

22. தகவல் அறியும் உரிமை சட்டம்

A. அக்டோபர் 10, 2006 B. அக்டோபர் 10, 2005 C. அக்டோபர் 12, 2005 D. ஜூலை 12, 2006

E. விடை தெரியவில்லை

23. பெண்களுக்கு மூதாதையர் சொத்துரிமை

a. தமிழ்நாடு இந்து வாரிசு உரிமை (தமிழ்நாடு திருத்தச்) சட்டம், 2005 ல் நிறைவேற்றி மூதாதையரின் சொத்துகளில் பெண்களுக்கும் சம உரிமை வழங்கியுள்ளது.

b. மத்திய அரசு இந்து வாரிசுரிமைச் சட்டம் 1989 இல் திருத்தங்களை மேற்கொண்டது. இதில் மூதாதையரின் பிரிக்கப்படாத சொத்தில் வாரிசு அடிப்படையில் பெண்களுக்கு சம உரிமையினை அளித்தது.

A. a, b சரி B. a சரி b தவறு C. a தவறு b சரி D. a, b தவறு E. விடை தெரியவில்லை

24. பொருத்துக: (அடிப்படை உரிமைகள்)

அ. சமத்துவ உரிமை - Art 14-18

ஆ. சுதந்திர உரிமை - Art 19-22

இ. சுரண்டலுக்கு எதிரான உரிமை - Art 23-24

ஈ. சமய (ம) மனச்சான்று சுதந்திரத்திற்கான உரிமை - Art 25-28

உ. சிறுபான்மையினருக்கான பண்பாடு (ம) கல்வி உரிமை - Art 29-30

ஊ. அரசமைப்புச் சட்ட வழி தீர்வுகளுக்கான உரிமை - Art 32

A. 1 2 3 4 5 6 B. 2 1 4 5 6 3 C. 2 1 4 3 6 5 D. 2 1 4 6 5 3

E. விடை தெரியவில்லை

25. ---------- கான நோபல் பரிசு கைலாஷ் சத்தியார்த்தி மற்றும் மலாலாவிற்கு கொடுக்கப்பட்டது.

A. இலக்கியம் B. அமைதி C. பொருளாதாரம் D. இயற்பியல்

E. விடை தெரியவில்லை

26. குழாய் மூலம் குடிநீர் விநியோகம் முறையினை பெரியார் எப்பொழுது செயல்படுத்தினார்?

A. 1920 B. 1919 C. 1918 D. 1921 E. விடை தெரியவில்லை

27. 73 மற்றும் 74வது அரசமைப்புத் திருத்தச்சட்டங்கள் இவ்வாண்டில் நடைமுறைக்கு வந்தன.

A. 1992 B. 1995 C. 1997 D. 1990 E. விடை தெரியவில்லை

28. சரியான இணையைத் தேர்வுசெய்க.

A. மின்னணு பணப்பரிமாற்றம் - கி.பி. (பொ.ஆ.) 1860

B. கடன் அட்டை - கி.பி. (பொ.ஆ.) 1946

C. அலைபேசி - வங்கி செயல்பாடு - கி.பி. (பொ.ஆ.) 1999

D. மேற்கண்ட அனைத்தும் E. விடை தெரியவில்லை

29. கூற்று 1 : நாடாளுமன்ற ஆட்சிமுறை அமைச்சரவை அரசாங்கம் அல்லது பொறுப்பு அரசாங்கம் அல்லது வெஸ்ட் மினிஸ்டர் அரசாங்க மாதிரி எனப் பல்வேறு பெயர்களில் அழைக்கப்படுகிறது.

கூற்று 2 : இவ்வகை ஆட்சிமுறை பிரிட்டன், ஜப்பான், கனடா, இந்தியா போன்ற நாடுகளில் காணப்படுகிறது.

A. கூற்று 1 சரி, 2 தவறு B. கூற்று 1, 2 சரி C. கூற்று 1, 2 தவறு

D. கூற்று 1 தவறு, 2 சரி E. விடை தெரியவில்லை

30. நாடாளுமன்ற ஆட்சிமுறையின் தவறானவற்றைத் தேர்ந்தெடு.

A. பெரும்பான்மை பெற்ற கட்சியின் தலைவர் பிரதம மந்திரியாவார்.

B. மத்திய சட்டமன்றம் அதிகாரம் படைத்தது. C. அதிகாரப் பிரிவினை மையப்படுத்தி இருப்பது.

D. அரசின் தலைவர் - குடியரசுத் தலைவராவார். E. விடை தெரியவில்லை

31. இந்தியாவில் முதன் முதலில் 1 ரூபாய் (ம) 2 ரூபாய் நோட்டுகள் எப்பொழுது தயாரித்து வெளியிடப்பட்டன?

A. 1913 B. 1918 C. 1917 D. 1920 E. விடை தெரியவில்லை

32. பொருத்துக: (ரூபாய் நோட்டு அச்சடிக்கும் இடம்)

அ. மகாராஷ்ட்ரா - நாசிக் - 1. 1928

ஆ. மத்தியப்பிரதேசம் - தேவாஸ் - 2. 1974

இ. கர்நாடகா - மைசூர் - 3. 1990

ஈ. மேற்கு வங்காளம் - சல்பானி - 4. 1990

A. 1 3 4 2 B. 1 2 3 4 C. 1 2 4 3 D. 4 3 2 1 E. விடை தெரியவில்லை

33. இந்திய ரிசர்வ் வங்கியின் தலைமையிடம்

A. சென்னை B. மும்பை C. கொல்கத்தா D. புதுடெல்லி E. விடை தெரியவில்லை

34. முன்னாள் சோவியத் யூனியன் _______________ க்கு எடுத்துக்காட்டு.

A. உயர் குடியாட்சி B. மதகுருமார்களின் ஆட்சி C. சிறுகுழு ஆட்சி D. குடியரசு

E. விடை தெரியவில்லை

35. வாக்குரிமையின் பொருள்:

A. தேர்ந்தெடுப்பதற்கான உரிமை B. ஏழைகளுக்கு வாக்களிக்கும் உரிமை

C. வாக்களிக்கும் உரிமை D. பணக்காரர்களுக்கு வாக்களிக்க உரிமை E. விடை தெரியவில்லை

36. அதிபர் மக்களாட்சி முறை பற்றிய சரியான கூற்றைத் தேர்ந்தெடு.

A. குடியரசுத்தலைவர் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

B. அதிபரே அதிகாரம் படைத்தவர் C. மாகாணத்தின் தலைவர் அதிபர் ஆவார்

D. அனைத்தும் சரி E. விடை தெரியவில்லை

37. மனித உரிமைகள் பற்றிய உலகளாவிய பேரறிக்கையில் ............. உறுப்புகள் உள்ளன.

A. 30 B. 32 C. 35 D. 33 E. விடை தெரியவில்லை

38. தவறான கூற்றைத் தேர்ந்தெடு.

1. பத்தாயிரத்துக்கும் அதிகமான மக்கள் வாழும் பகுதி பேரூராட்சி எனப்படும்.

2. பேரூராட்சித் தலைவரும் உறுப்பினர்களும் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

3. இவர்கள் பதவிக்காலம் 6 ஆண்டுகளாகும்.

4. பேரூராட்சியின் நிர்வாகத்தினை மேற்கொள்ள ஒரு செயல் அலுவலர் நியமிக்கப்படுகிறார்.

A. 1, 2 சரி 3, 4 தவறு B. 1, 2, 3 சரி 4 தவறு C. 1, 2, 4 சரி 3 தவறு

D. 1, 4 சரி 2, 3 தவறு E. விடை தெரியவில்லை

39. சரியான கூற்றைத் தேர்ந்தெடு.

1. இந்தியா சுதந்திரம் அடைந்த பின்னர், மக்களவையின் முதல் பொதுத்தேர்தல் 1951ம் ஆண்டு அக்டோபர் 25ம் நாள் முதல் 1952ம் ஆண்டு பிப்ரவரி 21ம் நாள் வரை பல்வேறு கால கட்டங்களில் நடைபெற்றது.

2. மொத்தம் இருந்த 489 இடங்களில் 363 இடங்களில் வெற்றி பெற்று இந்திய தேசிய காங்கிரஸ் ஆட்சியை அமைத்தது.

3. சுதந்திர இந்தியாவில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பிரதமர் ஜவஹர்லால் நேரு ஆவார்.

A. 1 (ம) 2 B. 1 (ம) 3 C. 1 மட்டும் D. 2 மட்டும் E. விடை தெரியவில்லை

40. பின்வருவனவற்றில் தவறானவற்றைத் தேர்ந்தெடு.

A. கிராமங்களில் செயல்படும் உள்ளாட்சி அமைப்புகள், கிராம ஊராட்சி என்று அழைக்கப்படுகின்றன.

B. தலைவர் மற்றும் பகுதி உறுப்பினர்கள் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். அவர்களது பணிக்காலம் 5 ஆண்டுகளாகும்.

C. கிராம ஊராட்சியின் ஆய்வாளராக ஊராட்சி ஒன்றியத் தலைவர் செயல்படுகின்றார்.

D. ஐநூற்றுக்கும் மேற்பட்ட மக்கள்தொகையைக் கொண்டுள்ள ஒவ்வொரு கிராமமும் கிராம ஊராட்சியாக உருமாறியுள்ளது.

E. விடை தெரியவில்லை

41. இந்திய தேர்தல் ஆணையம் அமைக்க வழிவகை செய்யும் அரசியலமைப்பு பிரிவு

A. பிரிவு 280 B. பிரிவு 315 C. பிரிவு 314 D. பிரிவு 325 E. விடை தெரியவில்லை

42. நோட்டா (NOTA) முறை அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு

A. 2012 B. 2013 C. 2014 D. 2015 E. விடை தெரியவில்லை

43. இன ஒதுக்கல் (Apartheid) என்னும் கொள்கையைப் பின் பற்றிய நாடு _______________

A. தென் சூடான் B. தென் ஆப்பிரிக்கா C. நைஜீரியா D. எகிப்து E. விடை தெரியவில்லை

44. 1985 ஆம் ஆண்டு திட்டக் குழுவினால் நிறுவப்பட்ட குழு எது?

A. பல்வந்ராய் மேத்தா குழு B. அசோக் மேத்தா குழு C. GVK ராவ் மேத்தா குழு

D. LM சிங்வி மேத்தா குழு E. விடை தெரியவில்லை

45. கீழ்க்கண்ட நாட்டின் தேர்தல் முறையினை இந்தியா ஏற்றுக் கொண்டுள்ளது.

A. அமெரிக்க ஐக்கிய நாடுகள் B. இங்கிலாந்து C. கனடா D. ரஷ்யா

E. விடை தெரியவில்லை

46. தவறான கூற்றைத் தேர்ந்தெடு. (குடியரசுத் தலைவர் தேர்ந்தெடுப்பதில்)

A. பாராளுமன்றத்தின் இரு அவையின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள்.

B. இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள்.

C. பாராளுமன்ற இரு அவைகள் மற்றும் மாநில சட்டமன்றங்களில் நியமிக்கப்படும் நியமன உறுப்பினர்கள் இக்குழுவில் அங்கம் வகிப்பர்.

D. இவற்றில் எதுவுமில்லை E. விடை தெரியவில்லை

47. கூற்று : தமிழகத்தின் பெரும்பாலான விவசாயிகள் குறுவிவசாயிகள் ஆவர்.

காரணம் : தமிழகத்தில் விவசாயம் செய்பவர்களில் பத்தில் ஒருவர் மட்டுமே பட்டியலினத்தவர். அவர்களில் 96 விழுக்காட்டினர் சிறு, குறு விவசாயிகள்.

A. கூற்று சரி, காரணம் சரி B. கூற்று சரி, காரணம் தவறு C. கூற்று தவறு, காணரம் சரி

D. கூற்று தவறு, காரணம் தவறு E. விடை தெரியவில்லை

48. ஒரு மனிதனுடைய உரிமை அச்சுறுத்தப்படும்போது, ஒவ்வொரு மனிதனுடைய உரிமையும் குறைக்கப்படுகிறது என்று கூறியவர்

A. காந்தி B. ஜான் எ∴ப் கென்னடி C. நேரு D. ராஜாஜி E. விடை தெரியவில்லை

49. தவறான கூற்றைத் தேர்ந்தெடு.

A. 2011 மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி இந்தியாவின் மொத்த மக்கள் தொகையான 121 கோடி மக்களில் 45 கோடி மக்கள் வாழ்தலின் அடிப்படையில் இடம்பெயர்ந்தவர்களாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

B. 2011 மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் படி தமிழகத்தில் 41 சதவீதம் கிரமப்புறங்களில் இடம்பெயர்ந்தவர்களாகவும் நகரப்புறங்களில் 35 சதவீதம் பேர் இடம்பெயர்ந்தவர்களாகவும் இருந்ததாகத் தெரியவருகிறது.

C. இந்தியாவில் 75 சதவீதம் பேர் தமிழ்நாட்டில் 52 சதவீதம் பேர் அவர்களது இடப்பெயர்விற்கான காரணமாகத் திருமணத்தை குறிப்பிடுகின்றனர்.

D. மொத்தத்தில் 2011 கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டில் ஐந்து பேரில் இருவர் இடம்பெயர்ந்தவராக உள்ளனர்.

E. விடை தெரியவில்லை

50. தவறான கூற்றைத் தேர்ந்தெடு.

A. மக்களவை தேர்தலிலோ (அ) மாநில சட்டசபைத் தேர்தலிலோ குறைந்தபட்சம் நான்கு மாநிலங்களில் பதிவான மொத்தச் செல்லத்தகுந்த வாக்குகளில் குறைந்தபட்சம் 6 சதவீதம் பெற்றிருக்க வேண்டும்.

B. மக்களவையில் குறைந்தபட்சம் 2 சதவீத இடங்களில் வெற்றி பெற வேண்டும். மேலும் குறைந்தபட்சம் மூன்றுக்கும் மேற்பட்ட 3 மாநிலங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

C. குறைந்தபட்சம் மூன்று மாநிலங்களில் 'மாநிலக் கட்சியாக' அங்கீகாரம் பெற்றிருக்க வேண்டும்.

D. மேற்கண்ட அனைத்தும் E. விடை தெரியவில்லை

51. மனித வளம் எனும் சொல் குறிப்பிடுவது

A. ஏழை மக்கள் மீதான முதலீடு B. வேளாண்மை மீதான செலவு

C. சொத்துக்கள் மீதான முதலீடு D. ஒட்டு மொத்த மக்களின் திறமை E. விடை தெரியவில்லை

52. மனிதவள மேம்பாட்டு குறியீடு (HDI) கணக்கில் பின்வரும் எந்தப் பரிமாணத்தை எடுத்துக் கொள்ளவில்லை?

A. பாலினம் B. உடல்நலம் C. கல்வி D. வருமானம் E. விடை தெரியவில்லை

53. இந்தியாவில் அதிகபட்ச சூரிய ஆற்றல் உற்பத்தியைச் செய்யும் மாநிலம்

A. தமிழ்நாடு B. மேற்கு வங்காளம் C. கேரளா D. ஆந்திரப் பிரதேசம் E. விடை தெரியவில்லை

54. இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பல்வேறு துறைகளில் எந்த இறங்கு வரிசை சரியானது?

A. முதன்மை துறை, 2ஆம் துறை, சார்புத் துறை B. முதன்மை துறை, சார்புத் துறை, 2ஆம் துறை

C. சார்புத் துறை, 2ஆம் துறை, முதன்மை துறை D. 2ஆம் துறை, சார்புத் துறை, முதன்மை துறை

E. விடை தெரியவில்லை

55. எந்த டெல்லி சுல்தான் வேலையின்மை பிரச்சனையை தீர்க்க "வேலை வாய்ப்பு அலுவலகத்தை" அமைத்தார்?

A. முகமது பின் துக்ளக் B. அலாவுதின் கில்ஜி C. ∴பெரோஷ் ஷா துக்ளக் D. பால்பன்

E. விடை தெரியவில்லை

56. பயிர் செய்யப்படும் பரப்பளவில் பாசன வசதி பெற்ற நிலத்தின் பரப்பளவு

A. 27% B. 57% C. 28 D. 49% E. விடை தெரியவில்லை

57. வெளிகுடியேற்றப் பதிவில் முன்னிலை வகிக்கும் மாவட்டம்

A. இராமநாதபுரம் B. கோயம்புத்தூர் C. சென்னை D. வேலூர் E. விடை தெரியவில்லை

58. கூற்று (A): நேரடி மக்களாட்சி சுவிட்சர்லாந்தில் நடைமுறையில் உள்ளது.

காரணம் (R): மக்கள் நேரடியாக முடிவெடுப்பதில் பங்கு பெறுகிறார்கள்.

A. (A) மற்றும் (R) இரண்டும் சரியானது மற்றும் (R), (A) வை விளக்குகிறது.

B. (A) மற்றும் (R) இரண்டும் சரியானது (R), (A) வை விளக்கவில்லை.

C. (A) சரியானது மற்றும் (R) தவறானது D. (A) தவறானது மற்றும் (R) சரியானது

E. விடை தெரியவில்லை

59. பொருத்துக:

| நாடுகள் | நாடாளுமன்றத்தின் பெயர்கள் |
|---|---|
| அ. இஸ்ரேல் | - 1. கெனெஸட் |
| ஆ. ஜெர்மனி | - 2. பந்தெஸ்டாக் |
| இ. டென்மார்க் | - 3. போக்டிங் |
| ஈ. நார்வே | - 4. ஸ்டார்டிங் |
| உ. அமெரிக்க ஐக்கிய நாடுகள் | - 5. காங்கிரஸ் |

A. 1 2 3 4 5 B. 1 2 4 5 3 C. 2 1 4 3 5 D. 2 1 4 5 3 E. விடை தெரியவில்லை

60. கடன் அட்டை(கிரெடிட் கார்டு)யை உருவாக்கிவர்

A. ஜுன் போடின் B. ஜான் பிக்கின்ஸ் C. எர்னஸ்ட் பர்க்னர் D. தாகூர் தாஸ் பார்கவா

E. விடை தெரியவில்லை

61. அரசமைப்பின் பிரிவு 21A ல் உள்ளபடி 6 முதல் 14 வயது வரையுள்ள குழந்தைகளுக்கு இலவச மற்றும் கட்டாயக் கல்வி வழங்க எந்த ஆண்டில் இந்திய நாடாளுமன்றம் கல்வி உரிமைச் சட்டத்தினை நடைமுறைப்படுத்தியது.

A. 2009 B. 2008 C. 2010 D. 2007 E. விடை தெரியவில்லை

62. குடிமக்கள் அனைவருக்கும் சமூகப் பொருளாதார சமத்துவத்தை வழங்குவது ..................

A. இறையாண்மை B. சமதர்மம் C. சமயசார்பின்மை D. மக்களாட்சி

E. விடை தெரியவில்லை

63. குறைபாடு உடைய குழந்தைகளே, மற்ற குழந்தைகளை விட ................... சதவீதம் அதிகமாக பாலியல் வன்கொடுமைக்கு ஆளாகின்றனர்.

A. 3.4 B. 3.5 C. 3.3 D. 3.7 E. விடை தெரியவில்லை

64. கூற்று 1 : அரசியல் கட்சிகள் மக்களுக்கும் அரசாங்கத்திற்கும் இடையே ஒரு பாலமாக செயல்படுகிறது.

கூற்று 2 : தலைவர், செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் தொண்டர்கள் எனும் மூன்று அங்கங்களை ஓர் அரசியல் கட்சி பெற்றுள்ளது.

A. கூற்று 1 சரி, 2 தவறு B. கூற்று 1 தவறு, 2 சரி C. கூற்று 1, 2 சரி D. கூற்று 1, 2 தவறு

E. விடை தெரியவில்லை

65. 178 கிராம் எடை கொண்ட ............. நாணயம் ‘ருபியா’ என்றழைக்கப்பட்டது.

A. தங்கம் B. வெள்ளி C. A&B D. செம்பு E. விடை தெரியவில்லை

66. மொத்த தேசிய மகிழ்ச்சி ஜிக்மே சிங்கியே வான்சுக் அவர்களால் எந்த ஆண்டு உருவாக்கப்பட்டது?

A. 1960 B. 1980 C. 1970 D. 1990 E. விடை தெரியவில்லை

67. மறைநீர் எனும் பதம் 1990ஆம் ஆண்டு யாரால் அறிமுகப்படுத்தப்பட்டது?

A. ஜுன் போடின் B. ஜான் பிக்கின்ஸ் C. எர்னஸ்ட் பர்க்னர் D. டோனி ஆலன்

E. விடை தெரியவில்லை

68. உலகின் எத்தனையாவது மிகப்பெரிய மறைநீர் ஏற்றுமதியாளராக இந்தியா விளங்குகிறது?

A. 6 வது B. 5 வது C. 7 வது D. 4 வது E. விடை தெரியவில்லை

69. தென்னிந்தியாவின் மூன்றாவது பெரிய ஆறு ------

A. கங்கை B. நர்மதை C. தபதி D. காவிரி E. விடை தெரியவில்லை

70. முழு அதிகாரத்துடன் கொண்ட ஒரு அரசாங்க முறை

A. சிறுகுழு ஆட்சி B. மதகுருமார்களின் ஆட்சி C. மக்களாட்சி D. தனிநபராட்சி

E. விடை தெரியவில்லை

71. அனைவருக்கும் வாக்குரிமை வழங்குவது

A. சமூகச் சமத்துவம் B. பொருளாதார சமத்துவம் C. அரசியல் சமத்துவம்

D. சட்ட சமத்துவம் E. விடை தெரியவில்லை

72. கூற்று (A): இந்தியாவில் அதிக எண்ணிக்கையிலான அழுத்தக்குழுக்கள் காணப்படுகின்றன.

காரணம் (R): அமெரிக்க ஐக்கிய நாட்டில் இருப்பதை போல இந்தியாவில் அழுத்தக் குழுக்கள் வளர்ச்சி அடைந்தவையாகக் காணப்படுவதில்லை.

A. (A) மற்றும் (R) இரண்டும் சரியானது (ம) (R), (A) வை விளக்குகிறது.

B. (A) மற்றும் (R) இரண்டும் சரியானது (R), (A) வை விளக்கவில்லை.

C. (A) சரியானது மற்றும் (R) தவறானது D. (A) தவறானது மற்றும் (R) சரியானது

E. விடை தெரியவில்லை

73. ஒரு 10 வயது பையன் கடையில் வேலைப்பார்த்துக் கொண்டிருக்கிறான் - எந்த உரிமையைப் பயன்படுத்தி அவனை மீட்பாய்?

A. சமத்துவ உரிமை B. சுதந்திர உரிமை

C. குழந்தை உழைப்பு மற்றும் சுரண்டலுக்கு எதிரான உரிமை

D. சமய சுதந்திர உரிமை E. விடை தெரியவில்லை

74. 73 மற்றும் 74வது அரசமைப்புத் திருத்தச் சட்டங்கள் இவ்வாண்டில் நடைமுறைக்கு வந்தன.

A. 1992 B. 1995 C. 1997 D. 1990 E. விடை தெரியவில்லை

75. தேசிய வருமானத்தின் உண்மை மதிப்பீடாக இவை கருதப்படுகிறது.

A. மொத்த நிகர உற்பத்தி B. மொத்த உள்நாட்டு உற்பத்தி C. நிகர தேசிய உற்பத்தி

D. நிகர உள்நாட்டு உற்பத்தி E. விடை தெரியவில்லை

76. கூற்று (A): நிகர தேசிய உற்பத்தி என்பது தேசிய உற்பத்தி அளவின் உண்மை மதிப்பீடாக கருதப்படுகிறது.

காரணம் (R): இது தேசிய வருமானம் என்று அழைக்கப்படுகிறது.

A. (A) மற்றும் (R) இரண்டும் சரியானது (ம) (R), (A) வை விளக்குகிறது.

B. (A) மற்றும் (R) இரண்டும் சரியானது (R), (A) வை விளக்கவில்லை.

C. (A) சரியானது மற்றும் (R) தவறானது D. (A) தவறானது மற்றும் (R) சரியானது

E. விடை தெரியவில்லை

77. பொருத்துக.

a) மேம்பாடு - 1) வனவிலங்குகள் பாதுகாப்புச் சட்டம்

b) மனித வளம் - 2) புதுப்பிக்க தக்க வளங்கள்

c) சூரிய சக்தி - 3) தினசரி வாழ்க்கையின் ஒரு பகுதி

d) 1972 - 4) கல்வி

A. 3 4 2 1 B. 4 3 2 1 C. 1 2 3 4 D. 3 1 2 4 E. விடை தெரியவில்லை

78. தமிழ்நாட்டில் ____________________ துறையில் அதிக நபர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.

A. சிறுதொழில் B. உற்பத்தி C. வங்கியல் D. வேளாண்மை E. விடை தெரியவில்லை

79. பணியிடத்தைக் கணக்கிடுவதற்கு ____________________ வயது வரையிலான வயதை கணக்கிடலாம்.

A. 12-60 B. 15-60 C. 21-65 D. 5-14 E. விடை தெரியவில்லை

80. பழங்காலத்தில் நேரடி மக்களாட்சி முறை பின்பற்றப்பட்டப் பகுதி

A) பண்டைய இந்தியாவின் குடியரசுகள் B) அமெரிக்கா C) பண்டைய ஏதன்ஸ் நகர அரசுகள்

D) பிரிட்டன் E) விடை தெரியவில்லை

81. கூற்று (A): நேரடி மக்களாட்சி சுவிட்சர்லாந்தில் நடைமுறையில் உள்ளது.

காரணம் (R): மக்கள் நேரடியாக முடிவெடுப்பதில் பங்கு பெறுகிறார்கள்.

A) (A) மற்றும் (R) இரண்டும் சரியானது மற்றும் (R), (A) வை விளக்குகிறது.

B) (A) மற்றும் (R) இரண்டும் சரியானது (R), (A) வை விளக்கவில்லை.

C) (A) சரியானது மற்றும் (R) தவறானது D) (A) தவறானது மற்றும் (R) சரியானது

E) விடை தெரியவில்லை

82. கூற்று (A): இந்தியாவில் நாடாளுமன்ற அரசாங்க முறை பின்பற்றப்படுகிறது.

காரணம் (R): இந்திய நாடாளுமன்றம் இரு சபைகளை உள்ளடக்கியது.

A) (A) மற்றும் (R) இரண்டும் சரியானது மற்றும் (R), (A) வை விளக்குகிறது.

B) (A) மற்றும் (R) இரண்டும் சரியானது (R), (A) வை விளக்கவில்லை.

C) (A) சரியானது மற்றும் (R) தவறானது D) (A) தவறானது மற்றும் (R) சரியானது

E) விடை தெரியவில்லை

83. சரியான கூற்றைத் தேர்ந்தெடு.

1. இந்திய அரசியலமைப்பு இறுதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆண்டு 1950

2. இரண்டு வகையான மக்களாட்சி நேரடி மக்களாட்சி மற்றும் மறைமுக மக்களாட்சி ஆகும்.

3. நேரடி மக்களாட்சிக்கு ஒரு எடுத்துக்காட்டு சுவிட்சர்லாந்து

4. இந்தியா மறைமுக மக்களாட்சி முறையினைக் கொண்டுள்ள நாடாகும்.

A. அனைத்தும் சரி B. 2, 3, 4 சரி 1 தவறு C. 1, 2 சரி 3, 4 தவறு

D. 2, 4 சரி 1, 3 தவறு E. விடை தெரியவில்லை

84. பொருத்துக.

a) தனிநபராட்சி - 1) 18

b) வாக்குரிமை - 2) அர்த்த சாஸ்திரம்

c) சாணக்கியர் - 3) வாடிகன்

d) மதகுருமார்கள் ஆட்சி - 4) வடகொரியா

A) 4 1 2 3 B) 1 2 3 4 C) 4 3 2 1 D) 2 3 1 4 E) விடை தெரியவில்லை

85. பொருத்துக.

a) தேசியக் கட்சி - 1) வணிகக் குழுக்கள்

b) ஒரு கட்சி ஆட்சி முறை - 2) அமெரிக்க ஐக்கிய நாடுகள்

c) இரு கட்சி ஆட்சி முறை - 3) சீனா

d) அழுத்தக் குழுக்கள் - 4) ஏழு

A) 4 3 2 1 B) 1 2 3 4 C) 3 2 1 4 D) 1 3 4 2 E) விடை தெரியவில்லை

86. கீழ்கண்ட வாக்கியங்களைக் கவனி

கூற்று (A): உரிமைகளும் கடமைகளும் ஓர் நாணயத்தின் இரு பக்கங்கள் போன்றவை.

காரணம் (R): நாம் விரும்பும் மதத்தை பின்பற்றுவதற்கான உரிமை உண்டு. பிற மதத்தினர் இடையே இணக்கமான உறவை ஏற்படுத்துவடன் அவர்களின் உணர்வையும் மதிக்க வேண்டும்.

A) (A) மற்றும் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கம்.

B) (A) மற்றும் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கமல்ல.

C) (A) சரி, ஆனால் (R) தவறு. D) (A) தவறு, ஆனால் (R) சரி. E) விடை தெரியவில்லை

87. பொருத்துக.

a) மாவட்ட ஊராட்சி - 1) கிராமங்கள்

b) கிராம சபைகள் - 2) மாநகரத் தலைவர்

c) பகுதி குழுக்கள் - 3) பெருந்தலைவர்

d) ஊராட்சி ஒன்றியம் - 4) மாவட்ட ஆட்சியர்

e) மாநகராட்சி - 5) நகராட்சிகள்

A) 4 1 5 3 2 B) 1 2 3 4 5 C) 1 2 3 5 4 D) 3 2 4 5 1 E) விடை தெரியவில்லை

88. கூற்று (A): மேம்பாடு வாழ்க்கைத் தரத்தை உயர்த்துகிறது.

காரணம் (R): மக்கள் அதிக வருவாய், சிறந்த கல்வி, உடல்நலம் மற்றும் ஊட்டச்சத்து, குறைந்த வறுமை பெறுவார்கள்.

A) (A) மற்றும் (R) இரண்டும் சரியானது மற்றும் (R), (A) வை விளக்குகிறது.

B) (A) மற்றும் (R) இரண்டும் சரியானது (R), (A) வை விளக்கவில்லை.

C) (A) சரியானது மற்றும் (R) தவறானது D) (A) தவறானது மற்றும் (R) சரியானது

E) விடை தெரியவில்லை

89. கூற்று (A): ஒழுங்குபடுத்தப்படாத துறையின் பொருளாதார பண்பு என்பது வீட்டினுள் உற்பத்தி நடவடிக்கை மற்றும் சிறுதொழில் செய்வதாகும்.

காரணம் (R): இங்கு குறைவான ஊதியமும் மற்றும் வேலைகள் முறையாக வழங்கப்படுவதில்லை.

A) கூற்று (A) மற்றும் காரணம் (R) சரி, கூற்றுக்கான காரணம் சரி

B) கூற்று (A) மற்றும் காரணம் (R) சரி, கூற்றுக்கான காரணம் தவறு

C) கூற்று (A) சரி காரணம் (R) தவறு D) கூற்று (A) தவறு காரணம் (R) சரி

E) விடை தெரியவில்லை

90. தொழிலாளர்களைப் பணியமர்த்துபவர்களாகவும், அவர்கள் பணிக்கான வெகுமதிகளைச் செலுத்தும் நபர்களாகவும் உள்ளவர்கள்

A) ஊழியர் B) முதலாளி C) உழைப்பாளி D) பாதுகாவலர் E) விடை தெரியவில்லை

91. பொருத்துக.

a) இடம் பெயர்வு கொள்கை - 1) வேலை

b) பெண் இடம் பெயர்வாளர் - 2) வெளி குடியேற்றம் குறைவு

c) சென்னை - 3) வெளி குடியேற்றம் அதிகம்

d) வசதி, வாய்ப்புடைய இடம் பெயர்வாளர் - 4) திருமணம்

e) சேலம் - 5) இடம் பெயர்தலின் அளவைக் குறைப்பது

f) ஆண் இடம் பெயர்வாளர் - 6) வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்திக் கொள்ள

A) 5 4 3 6 2 1 B) 1 2 3 4 5 6 C) 5 4 6 3 2 1 D) 3 6 5 2 1 4 E) விடை தெரியவில்லை

92. அரசியல் கட்சிகள் பொதுவாக எதன் அடிப்படையில் தோற்றுவிக்கப்படுகின்றன?

A. சமயக் கொள்கைகள் B. பொது நலன் C. பொருளாதாரக் கொள்கை

D. சமூகக் கொள்கைகள் E. விடை தெரியவில்லை

93. குடியரசுத் தலைவரின் நிதி தொடர்பான அதிகாரங்கள் மற்றும் பணிகள் குறித்த சரியான கூற்றை தேர்ந்தெடு.

1. பண மசோதா பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படுவதற்கு முன்பு குடியரசுத் தலைவரின் அனுமதி பெற்றாக வேண்டும்.

2. ஆண்டு வரவு செலவுக் கணக்குகளை இவர் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்கிறார்.

3. இந்திய ஒருங்கிணைந்த நிதியில் இருந்து எதிர்பாராத செலவுகளுக்கு பணம் இவரால் எடுக்க முடியும்.

A. 1 மற்றும் 2 B. 2 மட்டும் C. 1 மற்றும் 3 D. 1,2 மற்றும் 3 E. விடை தெரியவில்லை

94. யாரிடம் ராஜினாமா கடிதத்தை அளிப்பதன் மூலம் ஆளுநர் எந்த நேரத்திலும் தனது பதவியிலிருந்து விலகிக்கொள்ளலாம்.

A. அமைச்சரவை குழு B. முதலமைச்சர் C. குடியரசுத்தலைவர்

D. உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி E. விடை தெரியவில்லை

95. கீழ்கண்ட எந்த அமைப்பால் உள்ளாட்சி எல்லைகள் வரையறை செய்யப்படுகின்றன?

A. மாநில சட்டசபை B. மாநில தேர்தல் ஆணையம் C. பாராளுமன்றம்

D. இந்திய தேர்தல் ஆணையம் E. விடை தெரியவில்லை

96. எந்த விதி இரு பாலினருக்கும் சம வேலைக்கு சம ஊதியம் என்பதை உறுதி செய்கிறது?

A. விதி 39 B. விதி 40 C. விதி 45 D. விதி 38 E. விடை தெரியவில்லை

97. இந்திய அரசியலமைப்பு எதன் அடிப்படையில் தனிநபர்களுக்கிடையே பாகுபாடு காட்டுவதை தடைசெய்கிறது?

A. பாலினம் (ம) மதம் மட்டும் B. பாலினம், சாதி (ம) மதம் மட்டும்

C. பாலினம், சாதி, இனம் (ம) மதம் மட்டும் D. பாலினம், சாதி, மதம், இனம் (ம) பிறப்பிடம்

E. விடை தெரியவில்லை

98. அரசுக்கும் மாநகராட்சி உறுப்பினர்களுக்கும் இணையே இணைப்பு பாலமாக செயல்படுபவர் யார்?

A. மேயல் B. நகராட்சி ஆணையர் C. மாவட்ட ஆட்சியர் D. நகராட்சி உறுப்பினர்

E. விடை தெரியவில்லை

99. கீழ்கண்டவற்றுள் எவை 1957 ஆம் ஆண்டின் பஞ்சாயத்து ராஜ் சட்டத்திற்கு அடிப்படையாகத் திகழ்ந்தன?

A. சமூக அபிவிருத்தி திட்டம் B. தேசிய நீட்டிப்பு சேவை C. A மற்றும் B

D. இவற்றில் எதுவுமில்லை E. விடை தெரியவில்லை

100. தேர்தல் சின்னங்கள் ஆணை எந்த ஆண்டு பிறப்பிக்கப்பட்டது?

A. 1952 B. 1968 C. 1972 D. 2018 E. விடை தெரியவில்லை

## ANSWER KEY

| S.No | Ans | S.No | Ans | S.No | Ans | S.No | Ans | S.No | Ans |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | A | 21 | B | 41 | D | 61 | A | 81 | A |
| 2 | A | 22 | C | 42 | C | 62 | B | 82 | A |
| 3 | B | 23 | D | 43 | B | 63 | A | 83 | B |
| 4 | A | 24 | A | 44 | C | 64 | C | 84 | A |
| 5 | C | 25 | B | 45 | B | 65 | B | 85 | A |
| 6 | C | 26 | B | 46 | C | 66 | C | 86 | A |
| 7 | B | 27 | A | 47 | A | 67 | D | 87 | A |
| 8 | A | 28 | D | 48 | B | 68 | B | 88 | B |
| 9 | D | 29 | B | 49 | C | 69 | D | 89 | B |
| 10 | D | 30 | C | 50 | C | 70 | D | 90 | B |
| 11 | A | 31 | C | 51 | D | 71 | C | 91 | A |
| 12 | D | 32 | B | 52 | A | 72 | A | 92 | B |
| 13 | C | 33 | B | 53 | A | 73 | C | 93 | A |
| 14 | B | 34 | C | 54 | C | 74 | A | 94 | C |
| 15 | D | 35 | C | 55 | C | 75 | C | 95 | B |
| 16 | B | 36 | D | 56 | B | 76 | A | 96 | A |
| 17 | D | 37 | A | 57 | C | 77 | A | 97 | D |
| 18 | B | 38 | C | 58 | A | 78 | D | 98 | A |
| 19 | C | 39 | D | 59 | A | 79 | B | 99 | C |
| 20 | D | 40 | C | 60 | B | 80 | C | 100 | B |